மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி; (அ) 9,563 பேர்.

(ஆ) 613 பேர்.

செம்பியன் மாதேவியில் கோழிப் பண்ணை கட்டிடம்

*வினா எண். 297—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியான செம்பியன் மாதேவி கிராமத்தின் அருகில் அமைக்கப்பட்ட கோழி வளர்ப்புப் பண்ணை மூடப்பட்டதால், அதற்காகக் கட்டிய கட்டிடங்கள் தற்போது எதற்காகப் பயன் படுத்தப்படுகின்றன ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இக்கட்டிடம் பழுதுபட்ட நிலையிலிருந்தமையால், அவற்றின் ஒரு பகுதி செப்பனிடப்பட்டு, அதில் செம்பியன் மாதேவி கால் நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. கட்டிடத்தின் பிற பகுதிகளை பழுதுபார்த்து, அவற்றையும் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்

(அ) முதலமைச்சர் தம் வினாக்களுக்குப் பதிலளிப்பது குறித்து :

திரு. வ. துலுக்காணம் : தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் இருக்கிறது ஒரே ஒரு அரிசன அமைச்சர்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். பிரச்சினையை வேறுவிதத்தில் திருப்பக் கூடாது.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் இங்கே ஒன்றிரண்டு கேள்விகள் கேட்க விரும்புகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் அக்கேள்விகளுக்குப் பதில் அளிப்பார் என்று நீங்கள் பலமுறை வாக்களித்து அந்த வாக்கை நீங்கள் தவறிவிட்டீர்கள்—இந்தக் குற்றச்சாட்டை நான் உங்கள் மீது சுமத்தக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். டெல்லிக்குப் போய்விட்டு வந்த பிறகு பதில் சொல்வார் என்று பல தடவை சொன்னீர்கள். அவர் டெல்லிக்குப் போய் வந்து 7, 8 நாட்கள் ஆன பிறகும் கூட முதலமைச்சர் அவர்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லவில்லை. இனிமேலாவது முதலமைச்சர் கேள்விகளுக்குப் பதில் சொல்வாரா? அல்லது சொல்லவே மாட்டாரா? இது மிக மிக வெட்கக்கேடாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தவறாக புரிந்து கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். அவர் டெல்லிக்குப் போய் வந்த பிறகு முதலமைச்சரின் கேள்விகள் இடம் பெறும் என்று சொன்னேன். முதலமைச்சருக்குப் பதிலாக எந்த அமைச்சர் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முதலமைச்சர் கேள்வி இடம் பெறுவதற்கு அவர் டெல்லிக்குப்போய் திரும்பி வர வேண்டும் என்று என்ன இருக்கிறது? அவர் டெல்லிக்கு போய் இருக்கும்போதே கேள்விகள் இடம் பெறலாமே. பிறகு ஏன் டெல்லி போய் விட்டு வந்த பிறகு இடம் பெறும் என்று ஏன் சொன்னீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அப்பொழுது சொன்னேன்—இரண்டு நாட்கள் இடைவெளி இருக்கிறது என்ற காரணத்தினால்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களின் சார்பில், அவருடைய நிர்வாகத்துறைகள் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு நான் பதில் சொல்லியிருக்கிறேன். ஒரு வேளை நான் சொல்வது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு வெட்கக்கேடாக தோன்றுகிறதோ என்னவோ?

1979 மார்ச் 8]

திரு. மு. கருணாநிதி: மின்சாரத் துறை அமைச்சர் சொல்வது வெட்கப்படக் கூடியது என்று நான் சொல்லவில்லை—முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லாதது வெட்கக் கேடாக இருக்கிறது என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, முதலமைச்சர் எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும் என்று இல்லை. பழைய முதல்வருக்கு—எதிர்க் கட்சித் தலைவருக்கு நன்றாகத் தெரியும்—முதலமைச்சரின் சார்பில் மற்ற அமைச்சர்கள் பதில் சொல்ல வாய்ப்பும், உரிமையும் இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பெருந் தலைவர் காமராசர் அவர்கள் இந்த அவையில் முதல் அமைச்சராக இருந்த போது, பட்ஜெட் உரையிலோ, கவர்னர் உரையிலோ அவர் பேசுவது கிடையாது. அவருக்குப் பதிலாக அப்போது நிதியமைச்சராக இருந்த சுப்பிரமணியமோ, அல்லது பக்தவத்சலனார் அவர்களோ பேசுவார்கள். ஆகவே அவர் முதல் அமைச்சராக இருந்தபோது, கேள்விகளுக்கும் இவர்கள் தான் பதிலளிப்பார்கள்—அவர் பதில் அளிப்பது கிடையாது. அந்த முறை இருந்தால் பரவாயில்லை. பட்ஜெட் உரை, கவர்னர் உரை, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது உரை என்று வருகிற போது, 5 மணி 6 மணி நேரம் பேசுகிற முதல் அமைச்சர், கேள்வி நேரம் என்றால் பேசுவது கிடையாது, பதில் சொல்ல நேரம் இல்லை என்றால், அது மிகுந்த மன வேதனையை அளிப்பதாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பதில் சொல்ல நேரம் இல்லை என்பது அல்ல. எதிர்க்கட்சியைச் பொறுத்தவரையில் பதில் கிடைக்க வேண்டும் என்று ஆவலாக இருப்பது புரிகிறது. முதலமைச்சர் பதில் சொல்லாத நேரங்களில், முதலமைச்சரின் சார்பில், அவருடைய நிர்வாகத்தின் சார்பில், அமைச்சரவையின் சார்பில் எந்த அமைச்சர் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) விவசாயிகளின் போராட்டம், சிம்கோ மீட்டர் தொழில் நிறுவனத் தகராறு ஆகியவை குறித்து

திரு. மு. கருணாநிதி. தலைவர் அவர்களே, அடுத்து ஒரு முக்கியமான பிரச்னை. நேற்றைய தினம் இந்த அவையில் இரண்டு பிரச்னைகள்—அவைகளுக்காக அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்ட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.